சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 149வது வட்ட தி.மு.க. சார்பில் "மிக்ஜாம்" புயலினால் ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட, 3000 பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை 149–வது மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ் எம்.சி. ஏற்பாட்டில் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மற்றும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் பகுதி நிர்வாகிகள் வே.மதியழகன், மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.பாரதி எம்.சி., ச.சங்கர் கணேஷ் எம்.சி, வட்ட செயலாளர்கள் த.ரமேஷ், எஸ்.ரமேஷ்ராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் மேட்டுப்பாளையம் சாலை நந்தகோபால் பாலம் அருகில், மழையால் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் சீரமைப்பு மேற்கொண்ட புகைப்படத் தொகுப்புகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (17.12.2023) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தேசிய நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (சென்னை) திருமதி.கீதா, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சந்திரசேகர் (சென்னை), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) முருகேசன் (சென்னை) உட்பட பலர் உள்ளனர்.

மிக்ஜாம் புயல்: 'அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் நோய்ப் பரவல் இல்லை' என

தமிழ்நாடு அரசுக்கு - ஒன்றிய அரசு குழு பாராட்டு!

மழைக்கால 8–வது சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்து – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

சென்னை, டிச.18-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவத்துறை வரலாற்றில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் 7 வாரங்களில் 16,516 முகாம்கள் நடைபெற்று, 7,83,443 பேர் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர் என்றும் மிக்ஜாம் புயல் பாதிப்பு கண்டறிய வந்த ஒன்றிய அரசு குழு தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் நோய் பரவல் இல்லை என்று மருத்துவத்துறைக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8வது வாரம் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.12.2023) அடையாறு மண்டலம், வேளச்சேரி 100 அடி சாலை, சசிநகரில் நடைபெற்ற மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு 29.10.2023 அன்று தொடங்கி ஒவ்வொரு வாரம் சனிக்கிழமையும் தமிழ்நாடு முழுவதும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தொடர்ச்சியாக 10 வாரங்கள் இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இன்று (16.12.2023) 8வது வாரம் 3000 இடங்களில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதுவரை 7 வாரங்களாக நடைபெற்றுள்ள மொத்த முகாம்களின் எண்ணிக்கை 16,516. இதுவரை பயன்பெற்றுள்ள பயனாளர்களின் எண்ணிக்கை 7,83,443 பேர். இதில் காய்ச்சல் பாதிப்புகள் என கண்டறியப்பட்டவர்கள் 3,270 பேர், சளி மற்றும் காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டவர்கள் 1,972 பேர், அண்மையில் ஒன்றிய அரசு சார்பில் மிக்ஜாம் புயல் பாதிப்புகள் குறித்து பார்வையிட வந்திருந்த அலுவலர் குழு சார்பில் அதன் தலைவர் பத்திரிக்கையாளர் சந்திப்பில் தமிழ்நாடு அரசு வெள்ள மீட்புப் பணியில் மிகச்சிறப்பான வகையில் கையாண்டிருக்கிறது. அதேபோல் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மருத்துவ முகாம்கள் போன்ற பணிகள் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டு இருப்பதால் பெரிய அளவிலான பாதிப்புகள், நோய்த்தொற்றுகள் இல்லை என்று கருத்துக்களை தெரிவித்து இருக்கின்றனர். இந்த மருத்துவ முகாம்களில் 9 மாதம் தொடங்கி 15 வயது வரை உள்ள சிறார்களுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு உள்ளான பகுதிகளில் ரூபெல்லா தடுப்பூசி போடும் பணிகள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையல் இன்று நடைபெறும் மருத்துவ முகாம்களில் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, தரைத்தளத்தில் உள்ள குடிநீர் தொட்டிகளை பிளிச்சிங் பவுடர் பயன்படுத்தி தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மிக்ஜாம் புயல் பாதிப்புகளுக்குள்ளான 4 மாவட்டங்களில் நடைபெறும் மருத்துவ முகாம்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரை கிலோ பிளிச்சிங் பவுடர் தரப்பட்டு வருகிறது.

கோவிட் பாதிப்புகள் குறித்து பயப்பட தேவையில்லை

கொரோனா என்பது 2019 இறுதியில் தொடங்கி அது பல்வேறு வகையில் உருமாற்றங்களை பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நோய் எதிர்ப்பு சக்திகளை மேம்படுத்திடும் வகையில் 98% மேலானவர்களுக்கு 3 விதமான தடுப்பூசிகள் போடப்பட்டு தமிழ்நாடு மக்களிடையே நோய் எதிர்ப்பு சக்தி என்பது கூடுதலாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் இதே நிலை நீடித்து வருகிறது. இதனால் கோவிட் உருமாற்றம் என்பது தொடர்ச்சியாக கோவிட், ஆல்பா, பீட்டா, டெல்டா, டெல்டா பிளஸ், கம்மா, கப்பா, ஒமைக்ரான் போன்ற பல்வேறு வகையில் உருமாற்றம் என்பது தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் கடந்த 1 வாரத்திற்கு மேலாக சிங்கப்பூர் நாட்டில் உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று பரவல் இருப்பது அறியப்பட்டது. உடனடியாக சிங்கப்பூரில் உள்ள National Institute of Singapore அமைப்பில் உள்ள மருத்துவர்களோடு நாங்கள் தொடர்பு கொண்டு இந்த உருமாறிய வைரஸ் எந்தவகையிலான பாதிப்பை உருவாக்குகிறது என்று வினவிய போது, அவர்கள் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களுக்கு மூன்று அல்லது நான்கு நாட்களில் தொற்று சரியாகிவிடுகிறது. இருமல் மற்றும் சளி ஆகிய இரு உபாதைகள் மட்டுமே இதனால் ஏற்படுகிறது என்று அவர்கள் கூறியுள்ளனர். நேற்றைக்கு கேரளா மாநிலத்தில் 280 பேருக்கு கொரோனா பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளதை தொடர்ந்து, நமது பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்கள் கேரள மாநிலத்தின் பொது சுகாதாரத் துறை அலுவலர்களோடு பேசியுள்ளார். எனவே இந்த தொற்றின் பாதிப்பு என்பது மிதமான பாதிப்பாகவே உள்ளது, பாதிக்கப்பட்டவர்கள் 4 நாட்களிலேயே சரியாகி விடுகின்றனர் என்பது இன்றைய கள நிலவரமாக உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர்.ஜெ. இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ் மற்றும் உயரலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினர்!

வளசரவாக்கம் 149வது வட்டத்தில் 2000 பேருக்கு நிவாரணம்!

காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு! த.ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, டிச.18 -

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி, வளசரவாக்கம் 149வது வட்டத்தில் 2000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை டி.ஆர்.பாலு எம்.பி., மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., 11வது மண்டல குழுத் தலைவர்மதுரவாயல் வடக்குப்பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. செல்வி ரமேஷ், எம்.சி. ஆகியோர் நேற்று (17.12.2023, ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணிக்கு 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் (சி.வி..கோயில் தெரு, ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம்) வழங்கினர்.

இந்நிகழ்வில் மதுரவாயல் தெற்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள் மற்றும் பகுதி கழக துணைச்செயலாளர் வே.மதியழகன், ஆர்.சுரேஷ்பாபு, எம்.கிருஷ்ணமூர்த்தி, டி.என். கமலநாதன், திருமதி.குப்பு ராஜேந்திரன், எம்.குமார், பி.எஸ்.துரைசாமி, கே.சரவணன், எம்.ஏ.வி.சீனு. , எஸ். சுந்தரர்ராஜன், எஸ்.ஆறுமுகம், எம்.முரளி, எஸ்.அமல்ராஜ், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், ஆர்.விஜய், ஆர். வினோத், எஸ்.பரத், கே.ஜி. ஜெயவேல், எஸ்.குகா கார்த்திக், ஆர்.சிவலிங்கம், என். உடையப்பா, டி.மோகன், எம்.ஏ.வீரராகவன், டி.மோகனவேல், வி.டி.அரசு, எஸ். ரவி, பி.சேகர், ஏ.கணேசன், எம்.அமுல்ராஜ், பி.பொன் முத்துரமேஷ், சி.பாலமுருகன், ஆர்.அண்ணாமலை, டி.சித்ராதங்கராஜ், ஆர். எம். பழனியப்பன் , ஆர்.கல்யாணசுந்தரம், சி. சிவராமகிருஷ்ணன், எம்.சுரேஸ்மோசஸ், பி. கிருஷ்ணன், சுஜாதாந ரசிம்மன், என்.முருகேசன், வி. ஹேமந்த்குமார், எம்.கிருஷ்ணன், பி.சிவக்குமார், எஸ். அன்பழகன், எம்.சின்னு, எம். கார்த்திக், கே.எம்.சம்பத்குமார், எம்.சுரேஷ், ஸ்வீட் கிருஷ்ணன், எம்.ரவீந்திரன், கே.சரவணன்கிருஷ்ணமூர்த்தி, கே. அருள்குமார், ஆர்.தமிழ்காவ்யா, என். ராஜா, ஆர்.சந்திரகுமார், பாரதி மற்றும் கழக முன்னோடிகள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.

மேயர் பிரியா – ப.தாயகம் கவி எம்.எல்.ஏ.– செ.தமிழ்வேந்தன் பங்கேற்பு!

திரு.வி.க. நகரில் 2வது கட்டமாக 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச. 18 -

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை கிழக்கு மாவட்டம் தி.மு.க சார்பில் திரு.வி.க நகர் வடக்குபகுதியில் உள்ள 71, 71அ, 72அ, 74, 74அ, ஆகிய வட்டங்களில் 2வது கட்டமாக 5 கிலோஅரிசி,போர்வை, பாய், ரொட்டி, பால், பிஸ்கேட் ஆகிய பொருட்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை 10,000 குடும்பத்தினருக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

இந்நிகழ்வில் மேயர். பிரியா, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், புனிதவதி, சரிதாமகேஷ்குமார் பி.உதயசங்கர், பெரம்பூர். ஆர்.மகேஷ், எல்.பாண்டுரங்கன், மு.சரவணன், பகுதி அமைப்பாளர் கே.மணி மாறன், வட்ட செயலாளர்கள்: எஸ்.புஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி, எம்.இசட். அபோய், ஜி.கிருஷ்ண குமார், எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ், தில்லை கதிரவன், புல்லட். கி.ரமேஷ், ஆர்.ராஜன், புவனவதி, கினார் ஆறுமுகம், வி. ஜெகன், சுவீட்.பாபு, சீனிவாசன், அண்ணாதுரை, மதுரை பிரகாசம், துரைசாமி, விஜயகுமார், க.எழிலன், வ.நாமதேவன், டி. ராஜி, சத்தீஷ், இளஞ்செழியன், ராஜராஜன், த.வே. ஏகாம்பரம், இ.எஸ்.ரவிச்சந்திரன், எஃப்.செபாஸ்டின், சாக்ரடீஸ், ஜான்ரூவில், பி. ஜெயஸ்தா மஸ், சீஞ்சான், கிரிஜா, ஜி. சரண்ராஜ், மு. முகமதுரஃபி,

71. த.வே.ஏகாம்பரம், பாலாஜி, வி.வினோத், ஜமுனா குணசேகர், சங்கர், துரைபிரகாசம், லிங்கேசன், எஸ்.பாபு, ராமமூர்த்தி, ரவிகுமார், 71. சிவகுமார், உஷா, வி.நரேஷ், ஆர். நாராயணன், கார்த்திக், பல்சர் குமார், சஞ்சய்,மில்க் ரகு,சுரேஷ், முரளி, கஜேந்திரன், நீலகண்டன்,

71 (அ) ஜெ.மகிரசன், உமேஷ்குமார், பார்த்திபன், கவிதா, ரபியுல்லாகான் நந்தகுமார், விஸ்வநாதன், வ. சரவணன், நரேஷ். கி.சரவணன், லட்சுமி, சாந்தா வீரமுத்து, சபிதா, பாப்பு, மாரி, கார்த்திக், சரத், பிரேம், சசிகுமார், நிறைமொழி,

72. இன்பசேகர், ஆசை ராஜேந்திரன், சிவகுமார், செல்விராமகிருஷ்ணன், ஜெகதீசன், மகாதேவன், மோகன், பாண்டியன், எஸ். பாண்டியன், கலை சேகர், ஜி.வினோத், சுரேஷ், டேனியல், பாக்கியநாதன், கர்ணா, ராஜேஷ், ராஜசேகர், சுலோர் மணி, சகயாபாரதி கிரிஜா, பவானி, யுவராணி

72(அ) ந.வேலு, சிவ ஜானி, ஏ.சேகர், ருக்மணி, ரவிக்குமார், சங்கர், பிரபு தாஸ், வில்லியம்ஸ், குமார், யுவராஜ், கிரிஜா, தினேஷ், உஷா, சீமா, வே.கிரிதரன், அரவிந்தன். வேலு, சரண்ராஜ், சந்தோஷ், ஆகாஷ், வெங்கட்ரமானா, சகிலா, சந்தா, ரிட்டா, அங்கபாபு, செல்வகுமார், தியாகு.

74. வெங்கடேசன், சதீஸ், மதிமாறன், செண்பகவள்ளி, மகேந்திரன், சேகர், சீனிவாசன், அருள், நேசன், போஸ், யோகனந்தம், வினோத், ஞான சேகர், ஜெகதீஸ், விஜய், வினோத், டேனியல், ஏ. ஜான், வெங்கட், லூர்த், சேட்டு, ஷகிலா, கலை, அன்பு, அமுலு, கிரிஸ்டபர், குப்பன், ராம்மூர்த்தி, ராம்மூர்த்தி

74 (அ)ரவி பிரபு நிவாஸ், வள்ளல், சரளா,தினேஷ்குமார், பிரபாகரன், விஷ்ணு, சியோன் ராஜ், விஜயகுமார், மோகன்ராஜ், சி.ஆனந்த், ஆர். மனோஜ்குமார் உள்ளிட்ட பாக நிலை முகவர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமை! சொ.வேலு - வி.சுதாகர் முன்னிலை! மாவட்டப் பிரதிநிதி

மா.காந்தி தாயார் எம்.அமராவதி படத்திறப்பு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. - கே.எஸ்.இரவிச்சந்திரன் பங்கேற்பு!

சென்னை, டிச.18-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி மாவட்டப் பிரதிநிதி மா.காந்தியின் தாயாரும், நினைவில் வாழும் இ. மாரிக்கண்ணு வின் மனைவியுமான திருமதி மா.அமராவதி அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியை முன்னிட்டு படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (19.12.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 7 மணிக்கு, சென்னை, புளியந்தோப்பு, சிவராஜபுரம் முதல் தெருவில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்குகழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., தலைமை வகிக்க பகுதிச் செயலாளர்கள் சொ.வேலு, வி. சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமதி எம்.அமராவதி அவர்களின் படத்தை மாவட்டக் கழகச் செயலாளர்அமைச்சர் பி.கே. சேகர் பாபு திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் தயாநிதி மாறன் எம்.பி., கழக சட்டத்துறை இணைச்செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், புலவர் சாமி நாகப்பன், ஆர்.டி.சங்கர் நானா, க.வினோத்,வி.அபாய், தி.தயாளன், கா.எழிலன், சூளை நேரு, இ.காளிதாஸ், க.கோ. கோமகன், உள்பட மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக, இந்நாள், முன்னாள், நிர்வாகிள் கழக முன்னணித் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை, எம்.காந்தி, ஜி.கிளியம்மாள், எம். பார்த்திபன்,பி.சாந்தி, எம்.கார்த்திகேயன், கே.கலைவாணி, எம்.முருகன், எம். மைதிலி, எஸ்.அனுசயாசங்கர், என்.ஆனந்தி நாகராஜ்,இ.ஆறுமுகம், மு.அசோக்குமரா, எஸ்.சான்டிலியன், கே.வெங்கடேசன், எஸ்.புனிதன், மு.கு.ச. மோசஸ், இ.குமரன், டபிள்யூ. பொன்மொழியன், பி.பிரபாவதி, டபிள்யூ.மணிமொழியன், எம்.பாக்கியம், ஜி.ராஜாத்திவினோத்குமார், ஜி.தினகரன், டி.நிஷா, ஜி.இளவரசி ராமச்சந்திரன், டி.கே.எஸ்.பிரபாகரன், கே. கனிமொழி கார்த்திக், என்.ராம்கி, டி.கே.எஸ். சூரியா, ஜெ.ஜேஸ்வரி ஜெயபிரகாஷ், பி.கவிதாசன், பி.பிரியதர்ஷினி, டாக்டர் கே.கோகுலகிருஷ்ணன், என்.வெங்கடேசன்,பி.கமலி, கே.நிலா, எம்.முரளிகிருஷ்ணன், எம். மித்ரா, பி.ஸ்ரீமதி, பி.ஸ்ரீராம், எம்.சாதனா, எம்.ஆகாஷ், வி. கௌதம், ஆர்.சம்யுதா, வி.விக்ரம் கே.கிர்த்விக், டி.சித்தார்த், பி.மகிழினி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மானாமதுரையில் வேலை வாய்ப்பு முகாம்!

362 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஆணை!

திருமதி ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை. டிச. 18 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டிணைமுன்னிட்டு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு பயிற்சி துறையின் சார்பில் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில்மாவட்டவருவாய்அலுவலர் மோகனசுந்தரம் தலைமையில் வேலை வாய்ப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் 1273 பேர் பதிவு செய்திருந்தார்கள். இதில் 362, நபர்களுக்கு பணிக்கான ஆணை வழங்கப்பட்டது. 85 நபர்கள் இரண்டாவது கட்ட பதவி உயர்விற்கு தேர்வு செய்யப்பட்டார்கள். இந்த பணி நியமன ஆணைகளை வழங்கி மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்திருமதிதமிழரசிரவிக்குமார் சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை நகர மன்ற தலைவர் எஸ் .மாரியப்பன் கென்னடி, ஒன்றிய குழுத் தலைவர் திருமதி லதா அண்ணாதுரை ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன்,,ஒன்றியக் குழு துணை தலைவர் முத்துசாமி, வேலைவாய்ப்புதுறை அலுவலர்கள்மணிகணேஷ், ராஜலட்சுமி, வட்டாட்சியர் ராஜா, மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி,நிர்வாகிகள்மயில்வாகனன்,ரவிச்சந்திரன், முருகன்,மகளிரணி வளர்மதி, அழகேசன், சிவ நேசன், கண்ணன், மன்னர் மன்னன், தேசிங்கு ராஜா, தலைமை.ஆசிரியர்எல்.முருகன், ஆகியோர் கலந்து கொண்டார்கள். மாவட்டம்முழுவதிலுமிருந்ஏராளமான இளைஞர்கள் முகாமில்கலந்துகொண்டார்கள். முன்னதாகமாவட்ட ஊரக வாழ்வாதாரதிட்ட இயக்குனர் வானதி வரவேற்றுப் பேசினார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் திரு.வி.க நகர் வடக்கு பகுதி 72'அ வட்டம் புளியந்தோப்பு நரசிம்ம நகர் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலைத்துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி. கே. சேகர்பாபு நிவாரண பொருட்களை வழங்கினார்.உடன் மேயர். பிரியா,ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், மு. சரவணன், எம்.இசட்.அபோய், எம்.ஏ.டிக்கா, சே.மணிமாறன், ந.வேலு, சிவஜானி, மாவுமில்சேகர், பி.ஜெயசிங் மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

பம்மல் வடக்கு தெற்கு பகுதி செயல் வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றினார்.நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி,துணை மேயர் கோ.காமராஜ் ,பகுதி கழக செயலாளர்கள் வே.கருணாநிதி,த,ஜெயக்குமார்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.